ஓம்

தமிழ்மொழி வாழ்க.

தமிழர்கட்கும் தமிழ்மொழிக்கும்

நேர்ந்த, நேரப்போகின்ற இன்னல்களை எண்ணி

தமிழ்த்தாய் புலம்பல்

ஆக்கியோன் :

சென்னை அகத்திய குருகுலம்

சாது நாராயண தேசிகர் மடாலயம்

சுவாமி அருணகிரிநாத ரவர்கள்.

சென்னை :

செங்குந்த மித்திரன் அச்சுக்கூடம்

1937.

ஓம்

தமிழ்த் தாய் புலம்பல்

(நொண்டிச்சிந்து)

1. நெஞ்சு பொறுக்கு தில்லையே எனக்கு
நேர்ந்த இடுக்கண்களை நினைக்கும் தோறும்
நஞ்சிலே தேன் கலந்தே ஊட்டும்
நயவஞ்ச மாக்களினல் நலிகின்றேனே (நெ)

2. பஞ்சதந் திரமுழுதும் ஓர்
படிவமா யமைந்தபார்ப் பனவ மாக்கள்
வஞ்சம் பொய் தந்திரங்களால் பற்பல
வகையிலென் மக்களெல்லாம் அடிமை கொண்டார் (நெ)

3. என் மனந் துடிக்குதையோ யானினி
எந்தவு லகிற்சென்று குடியேறுவேன்
கன்மனப் பார்ப்பனனையோ இந்தியைக்
கட்டாய மாய்ப்புகுத்த முயல்கின்றனே (நெ)

4. பஞ்சை பனதிகள் போல வந்து
பைந்தமிழ் நாட்டின்மெள்ளக் குடியேறினர்
கொஞ்சமும் நன்றியிலாமல் என்னையே
கொலைசெய்யப் பார்க்கின்றனர் கொடியரந்தோ ! (நெ)

5. என் னுயிர்த் தமிழ் மக்களே யா னுங்கட்
கென்னென்றெ டுத்துரைப்பேன் என்னிலைமையை
மன் னுயிர் தோன்றுதற்குமுன் யான்வந்த
வரலாற்றைச் சொல்வேன் கொஞ்சங்கேட்டிடுவீர் (நெ)

6. நெருப்பினில் வெம்மை யெனவே இறைபால்
நிலவிடும் பரை தரும் உலகுயிர்முன்
கருக்கொள் வெளியிலிருந்தே ஓங்
கார ஒலிவடிவாய்க் காற்றிற்கலந்தேன் (நெ)

7. நெருப்பொடு நீரிற்கலந்தேன் பின்பு
நிலத்தினும் நிலத்துறு முயிர்களெல்லாம்
உருக்கொள்ளுங் கருப்பையுள்ளே யானும்
ஒடுங்கி யிருந்துபிறந் தோவென்றொலித்தேன் (நெ)

8. அகாரமு தலவெழுத்தாய் பலவே
றக்கர மாகிமொழி யரும்பு விட்டேன்
பகாரு முழு முதல்வன் செவ்விய
பவழவாய் தனில்மலர் பாக்கியம் பெற்றேன் (நெ)

9. முப்பத்து மூன்றுமொழியாய் அதனை
முப்பத்துமுக் கோடிதேவர் கேட்டு மகிழ்ந்தார்
ஒப்புயர்வில் அம்மொழிகளை முதலில்
ஒருநான்கு சூத்திரமாய் யாத்திடப்பெற்றேன் (நெ)

10. விருத்தி யடைந்து வளர்ந்தேன் எனது
மென்மை யழகினிமை மேன்மையுங் கண்டே
கருத்தனும் அருத்தியுடன் அழியாக்
கன்னித் தமிழெனவே காதலித்தனன் (நெ)

11. தொடுகட லுண்டமுனிவன் அந்தச்
சூத்திரம் நான்கினிறை பொருண்முழுதும்
கடுவமர் களனிடத்துங் குறிஞ்சிக்
கடவுளிடத்தும் பன்ணுட் கற்றுத் தெளிந்தான் (நெ)

12. சந்தனப் பொதிகையினில் பதினெண்
தவமுனி சித்தரிடந் தங்கியிருந்தேன்
அந்தமிழ் சிற்றகத்தியம் மிகப்பே
ரகத்திய முதலிய அணிபுனைந்தேன் (நெ)

13. இந்திரன் கண்டு களித்தான் முனிவர்
இருடியர் எந்தி யெனை யினிதுவந்தார்
சந்திரர் சூரியரும் என்னைச்
சந்ததம் வந்துவந்து தழுவிச் செல்வார் (நெ)

14. பொருப்பிடை நின்று தவழ்ந்தே தண்டமிழ்ப்
புலவர கங்களிலும் புனித சங்கத்
திருப்பிலும் ஏறியிருந்தேன் முதல்
இடை கடை யெனு மூன்று சங்கமுங்கண்டேன் (நெ)

15. பல்காப் பியங்களிலும் மிகப்
பழமையெ னும்பொருளைப்பயந்து நிற்கும்
தொல்காப் பியமதனைப் பின்னர்
தொல்காப் பியனாலே தொகுத்தளித்தேன் (நெ)

16. அகத்திய முனிவரும் அந்தோ
அவர் மாணவர் தொல் காப்பியரும்
இகத்தினிற் புகழ்பெற்றதால் அவர்களை
ஏழையர் தம்மரபென் றெழுதி வைத்தார் (நெ)

17. விழுமிய புலவரெல்லாம் பார்ப்பன
விந்திற்பி றந்திருக்க வேண்டு மென்பார்
வழுவிலா வள்ளுவரையும் தங்கள்
மரபின ரென்று சொல்வர் மதியிலிகள் (நெ)

18. அருண கிரிமுனிவரும் அந்தோ
அவர்களின் விந்தினுக்கே பிறந்தா ரென்பார்
பொறுமை மிகவுங் கொடிதே பன்னாட்
பொறுத்துப் பொறுத்தே யிந்தக்கதிக்காளானேன் ()

19. இலக்கணம் வரை யறுத்தேன் இன்னம்
இயலிசை நாடகமா யேற்ற மடைந்தேன்
மலக்குச்சொல் லிந்திப்பாடைக்கு இலக்கண
வரம்புண்டோ பேச நாவில் நரம்புமுண்டோ (நெ)

20. பத்துப்பாட் டாதிகளையும் எனது
பதினெண் கீழ்க்கணக்கையும் படித்துணர்ந்தோர்
எத்துணையும் பொருத்தமிலா இந்தியை
எவரேனும் படிப்பதற்கிச்சை கொள்வரோ (நெ)

21. இழையா யிரம்பொன் பெறும் மிக்க
எழின்மணி மேகலையை இடையுடுத்தேன்
வளையா பதியெனு மோர் தூய
மணியொலித் தொடியென்றன் கரத்தணிந்தேன் (நெ)

22. சிலப்பதி காரமென்னும் நல்ல
செம்பொற் சிலம்பதனைக் காலிலணிந்தேன்
கலப்பதில் குண்டல கேசி யென்னுங்
கணிப்பருங் குழைமணிக் காதிலணிந்தேன் (நெ)

23. சிந்தா மணியுடனே மற்றோர்
சிறந்த சூளாமணியுஞ் சிரத்தணிந்தேன்
நந்தாப் புகழ்படைத்தேன் தமிழ்ப்பெரும்
நாட்டுமூ வேந்தர்களால் மேட்டிமையுற்றேன் (நெ)

24. தெள்ளிய பொருண் முழுதுஞ் செறிந்த
திருக்குற ளென்னுந்திரு மறையமுதை
வள்ளுவன் மனத்தினின்றே இந்த
வையகத் தோர்களுய்ய வடித்தளித்தேன் (நெ)

25. உம்பரும் போற்ற நின்ற என்றன்
ஒருதவத் தமிழ்மகன் கம்பநாடனால்
பம்புரா மாயணத்தில் தமிழர்
பழமைச் சிறப்பனைத்தும் பகர்ந்துவைத்தேன் (நெ)

26. செவ்வையாய்ப் பேசத்தெரியா மிகஇளஞ்
சிறுவரும் படித்துய்யச் சிறு சொற்களில்
ஔவையா ராகிவந்தே யானே
அரும் பெரும் நீதிநூல்கள் அருளிச் செய்தேன் (நெ)

27. மருத்துடன் மணிமந்திரம் இரத
வாதசிற்ப சோதிடக் கலைவகுத்தேன்
தரித்திரம் பிடித்தமக்காள் கஞ்சிக்குத்
தவிக்கின்றீர் பிழைப்பின்றித் தலைவிதியோ (நெ)

28. தேவாரந் திருவாசகம் கோவை
திருப்புகழ் பிரபந்தந் திருவருட்பா
நாவாரப் பாடியுருகி நீங்கள்
நாத னருள்பெறவே நானருள் செய்தேன் (நெ)

29. அறம் பொருளின்ப நூல்களும் மெய்வீ
டதனை யளிக்கவல்ல ஞான நூல்களும்
நிரம்பத் தமிழ் மொழியினில் சங்க
நிதிபது மநிதிபோல் நிறைத்து வைத்தேன் (நெ)

30. ஓலை நறுக்கிலிருந்தே விரைவாய்
ஓடும்வை யைநதியை யெதிர்த்தேறினேன்
கால நதியினாலேயும் நந்தமிழ்க்
கன்னியழி யாளென் றெண்ணியிருந்தார் (நெ)

31. நெருப்பிலும் நின்றுநடித்தேன் நெருப்பால்
நீற்றிய எலும்பையும் பெண்ணுருச்செய்தேன்
மறைக்கத வினைத்திறந்தேன் முதலையுண்
மகவையு முன்னம்வர வழைத்துத்தந்தேன் (நெ)

32. ஆரியம் வருமுனமே யானே
அகிலமு ழுதுமாண்டே னென்பதற்கையோ !
சீரிய தமிழ்ச்சின்னங்கள் பற்பல
தேசத்து மண்ணிலின்னுங் கண்டெடுக்கின்றார் (நெ)

33. வானவர் பேசும்பாடையாம் கீர்
வாணபா டையுலக வழக்கிலில்லா
தேனென வுணர்ந்தீர்களோ உலகில்
எங்கும் நானிருந்ததால் இடமில்லாமல்

34. சொல்லள வினிலிருந்தாள் பின்பத்
தோகைகீர் வாணியாளுநன் றுணைவி யென்றாள்
நல்லதென் றிடங்கொடுத்தேன் அவளின்று
நானே யுனக்குமூத்தா ளென்று சொல்கின்றாள் (நெ)

35\. என்றாலும் அவள் தனியாய் எனைப்போல்
இவ்வுல கவழக்கில் வாழ்வதற்கிலே
குன்றுயென் வளப்பங்கண்டு மெதுவாய்க்
கூடிமறைந்தெனைப் போற் குலவுகின்றாள் (நெ)

36\. ஆரியப் பார்ப்பனர்கள் என்நாட்டில்
அடிவைத்த நாண்முதல் அரிய வென்றன்
சீரிய மொழி வளப்பம் அந்தோ
சிதைந்து சிதைந்து பல திரிபடைந்தே

37\. கன்னடந் தெலுங்கெனவும் பின்பு
கவின்மலை யாளமுடன் துளுவெனவும்
பன்னிடப் படுகின்றதே அதனைப்
பற்றியும் நான்கவலைப் பட்டதே யில்லை (நெ)

38\. அன்றொரு பாஞ்சாலியைத் துரியன்
அவை தனிற் செய்தஅவ மானமதைப்போல்
இன்றொரு செய்தி கேட்டேன் அதனை
எண்ணும்போ தென்னிதயந் துடிக்கின்றதே (நெ)

39\. தட்டிப்பே சுவாரிலையேல் தம்பி
சண்டப்ர சண்டனென்று சாற்றுதல் போல
இட்டப்படி சட்டங்கள் செய்ய இங்கு
இராஜ கோபாலாச்சாரி யிறங்கிவிட்டான் (நெ)

40\. இந்தியை எனக்காளாக்க அந்தோ!
இராஜகோபாலாச்சாரி இரவு பகல்
சிந்தனைசெய் கின்றுனமையோ இந்தச்
சேதியைக் கேட்டென்மனம் பதைக்கின்றதே (நெ)

41\. ஆடுகள் நனையுதென்றே குந்தி
அழுததாம் ஒநாய்அந்தக் கதைபோற்றமிழ்
நாடுமுன் னேற்றமடைய இந்தியை
ராஜகோபாலாச்சாரி நயந்தளித்தல் (நெ)

42. இந்தியோர் நல்ல செருப்பாம் அதனை
எனதுகா லிற்றரிக்க ஏந்திக்கொண்டிங்கு
வந்திருக்கின்றனையோ சக்கர
வர்த்திரா ஜகோபாலன் மந்திரியாக (செ)

43. சீனத்துப் பெண்களுக்கு முன் கால்கள்
சிறுக்கமாட் டுமிருப்புச் செருப்பதுபோல்
ஈனத்தை யுண்டுபண்ணவே அந்தோ !
இந்திச்செ ருப்பையென்றன் காலில் மாட்டுதல் (செ)

44. பாரத நாடுமுழுதும் இந்திப்
பர்டையைக் கற்றுவிட்டாற் பலவகுப்பும்
சேரலாம் ஒற்றுமையாக நமது
தேசத்தை யாண்டிடலா மென்றுசொல்கின்றார் (செ)

45. யுத்திக்குப் பொருத்தமுண்டோ அந்தோ
ஒருகுலம் ஒருமொழி யொருநாட்டவர்
குத்திக்கொலைகள் புரிந்தே பல
கோடிக்க ணக்கினிலே மடிகின்ற தேன் (செ)

46. சாதிப்பி ரிவுகள்செய்தே என்றன்
தனித்தமிழ் மக்களெல்லாம் பிரித்துவிட்ட
வேதியர் சந்ததியார்கள் சாதி
வேற்றுமைகளைப்போக்கல் வியப்பல்லவோ (செ)

47. ஆட்டுத் தோலளவு கேட்டோர் இந்தியா
அனைத்தையுங் கைப்பற்றியே ஆள்வதுபோல் நம்
நாட்டிலிந்திக் கிடங்கேட்கின்றார் பின்பு
நமையும் அடிமையாக்க நயவஞ்சகர் (செ)

48. உழுதுப யிரிடுமக்கள் நூற்றுக்
கொன்பது பேர்களின்னும் ஊர்ப்புறங்களில்
பழுதறு தாய்மொழியையே எழுதிப்
படிப்பதற் கின்றிக்கண்ணீர் வடிக்கின்றாரே (செ)

49. இக்குறை களையொழிக்க இவர்கள்
எண்ணாத காரணமென் இந்திப்பாடையை
அக்கரை யாகப்புகுத்தல் தமிழின்
ஆக்கத்தைக் குறைப்பதற் கன்றி வேறுண்டோ (நெ)

50. ஆங்கிலம் கற்றதமிழர் யெனையோர்
அயல்மொழி போலவன்றோ நினைத்துவிட்டார்
தூங்கி விழித்திடும்போதும் தாங்கள்
துரைமக்கள் போலபேசத் தொடங்கிவிட்டார் (நெ)

51. அன்னையை "மதரென்" கின்றார் தமது
அப்பனை "பாத" ரென்றும் அறைகின்றனர்
என்னையும் "டமி" லென்கின்றார் அந்தோ
இந்தியுங் கற்றாராயின் என்கதியாதோ (நெ)

52. துருக்கரின் பாடையினொடு வெள்ளைத்
துரைகளின் பாடைகளுஞ் சுட்டபுண்ணந்தோ
பருக்குதிர்தற்கு முனமே இந்திப்
பாடையு மென்னைச்சுடப் பார்க்கின்றதென்றால் (நெ)

53. தம்பிவி பீடணன் போய் அன்று
தசரத ராமனிடம் உளவு சொல்லி
கும்ப கருணனுடனே இராவணன்
குலத்தைக் கருவறுத்த கொள்கையினைப்போல்

54. கோடரிக் காம்புகளாய் ஆரியக்
குழுவோடென் மக்கள் சிலர் கூடிக்கொண்டு
ஆடென்றால் ஆடுகின்றார் உங்களை
அடக்கென்றால் அடிக்கவு முன் வருகின்றார் (நெ)

55. என்றைக்கிவ் வாரியர்கள் அந்தோ
எடுத்தடி வைத்தார்களோ யெனது நாட்டில்
அன்றைக்கே தமிழகத்தின் மேன்மை
அறம்பொரு ளின்பமெல்லாம் அழியலாச்சே (நெ)

56. பார்ப்பனர் மதக்கொள்கையை மறுத்தோர்
பறையர்கள் பள்ளரென்று பழித்தொதுக்கி
சேர்க்கவே கூடாதென்றனர் இன்றவர்
சேரியைக் கூட்டிச் சுத்தஞ் செய்யப்போகின்றார் (நெ)

57. தீண்டாமை யொழிப்பதற்கு காந்தி
சிறையிலுண் ணாவிரத மிருக்கும்போது
மாண்டு மடிந்து விடானோ எங்கள்
மதத்தைய ழிக்கவந்த மாபாவியென்றார் (நெ)

58. பின்பந்தக் காந்திமகற்கே தமது
பெண்ணையு மணஞ்செய்வித்துப் பெருமை பெற்றார்
அன்புரு வானகடவுள் இவர்தம்
அகத்துள்ள வஞ்சனையும் அறிந்திடானோ (நெ)

59. ஆங்கிலர் ஜர்மானியர் அந்தோ
அமெரிக்கர் களுமெங்க ளாரியரென்றார்
தாங்களும் பெண்கள் கொடுத்தார் அவர்
தங்களின் பெண்களையுந் தாமணஞ் செய்தார் (நெ)

60. ஆங்கில ஆட்சியினை ஆனால்
அறவே யொழிக்கவேண்டுமென்று பேசியே
காங்கிர சியக்கத்தினிற் பாதிப்பேர்
கலந்ததி காரமெல்லாங் கைபற்றிக்கொண்டார் (நெ)

61 ஆங்கிலருடன் பாதிப்பேர் கூடி
அவர்க்குளவு சொல்லியே ஆட்சி செய்கின்றார்
ஈங்கிவர் சூழ்ச்சிதட்கு மாயை
இந்திர சித்தன்கூட இணையாவரோ (நெ)

62. ஆங்கிலர் தந்த பட்டத்தை ஏற்றோர்
அனைவரும் நீக்கிவிட வேண்டுமென்றனர்
காங்கிரஸ் காரர்களெலாம் பதவியைக்
காறி யுமிழ வேண்டு மென்று பேசினார் (நெ)

63. மீண்டுமப் பதவியெல்லாம் ஏற்க
வேண்டுமெனக் கிளர்ச்சி மிகவுஞ்செய்தார்
ஈண்டந்தப் பதவியெலாம் தாங்களே
ஏற்றுச்சிங் காதனத்து மேறிவிட்டனர் (நெ)

64. சட்டசபையார் முழுதும் முதன்மந்திரி
தான்சொன்ன படிசெய்யவேண்டுமென்கின்றார்
இட்டம்போ லெவராயினும் பேசுதற்
கியலாத படிகட்டுத்திட்டமுஞ் செய்தார் (நெ)

65. பசுபுலித் தோலையுடுத்தே ஊரார்
பயிரெல்லா மேய்வதுபோல் பாதகர் சிலர்
திசைதொறும் புகழ்படைத்த காந்தியின்
தேசியப் போர்வைபோர்த்தி மோசஞ் செய்கின்றார் (நெ

66. பஞ்சாங்கஞ் சொல்லிப்பிழைக்கும் பார்ப்பனப்
பரம்பரையா ரமைச்சர் பதவிபெற்றால்
அஞ்சாமலிதுவுஞ் செய்வார் இட்லர்
ஆக்கினைசக்கரம் நடத்தவுஞ் செய்வார் (நெ)

67. வீரமென் மொழியிலின்றும் அந்த
வெள்ளாட்டி யிந்திகற்றால் வீரமுண்டென்றும்
தீரமா யொருவன் சொன்னான் இந்தத்
தேசத்து ரோகிதமிழ் மகனவனே (நெ)

68. புறப்பொருள் நூல்கள் முழுதும் வீரப்
பொலிவுந் தமிழர்களின் போர்த்திறமையும்
நிரப்பிவைத் திருப்பதனை அந்தோ
நீங்களெடுத்துக் காட்ட நினைவில்லையோ (நெ)

69. எண்ணருந் தமிழ்நூல்களைப் பாடிய
தெக்கால மென்றறியா தேழையொருவன்
மூன்னூறு வருடமாகத் தமிழே
முன்னேறுமற் சிறையில் கிடந்ததென்றான் (நெ)

70. என்தாய் மலடியெனவே கூறும்
ஏழையிவனை ஐயோ! என்னென்றுரைப்பேன்
தன்தாயை யிழிவுசெய்யும் இவனைத்
தமிழ்மகனென்று சொல்லத் தகுதியுண்டோ (நெ)

71. பெற்றதாய் தந்தையரும் தான்
பிறந்தபொன் னாடுமவன் பேசுமொழியும்
நற்றவத் தோர்களடையும் அந்த
நான்முக னுலகினுஞ் சிறந்ததன்றோ (நெ)

72. பல்லினைப் பிடுங்குதற்கும் ஏற்ற
பதவியைப் போக்குதற்கும் ஆண்மையுடையோர்
இல்லையென் றெண்ணி யொருவன் இந்தியை
எதிர்ப்பவ ரெல்லாம்அறி விலிகளென்றான்

73. இதுவரை தமிழர்கட்கும் அறிவுசற்
றிருப்பதா யெண்ணினனும் இந்திமறுப்பால்
மதிசற்று மில்லையெனவே தமிழரை
மதித்தானும் மற்றொருமதியிலியந்தோ

74. வாயில்லாப் பூச்சிகள்போல நீங்கள்
மௌனமா யிருப்பதால் மந்திரிமார்கள்
வாயில் வந்தபடிக்கெலாம் பேசவும்
வரையவுந் துணிவுடன் வந்துவிட்டனர் (நெ)

75. எவர்களின் வாக்குரிமையால் அந்தோ
இவர்களிப் பதவியை யேற்க நேர்ந்ததோ
அவர்களை யொரு சிறிதும் மதிக்காமல்
ஆணவத்தோடமுல் செலுத்தவெண்ணினார் (நெ)

76. பைந்தமிழ் நாட்டின் முன்வந்த ஆரியப்
பார்ப்பனர் தங்களுக்குப் பக்கத்துணையாய்ச்
செந்தமிழ்மக்கள் சிலரைத் தம்முடன்
சேர்த்துப் பார்ப்பனராகச் செய்துவிட்டனர் (நெ)

77. இராமா நுஜன்காலத்தும் அந்தோ
எனது மக்கள் சிலர்க்கு நூலினை மாட்டி
பிராமண னாக்கிவிட்டனன் அவர்களும்
பெருமையாய்ப் பார்ப்பானென்று பேசுகின்றனர் (நெ)

78. சாதிப்பி ரிவினைசெய்தே உயர்வு
தாழ்வையுங்கற் பித்ததால் தமிழரந்தோ!
பாதிது ருக்கராயினர் பின்பு
பலர்கிறிஸ் துமதத்திற் சேரலாயினர் (நெ)

79. துருக்கர் கிறித்துவர்களாய் மாறிய
தொன்மைத்தமிழரின் னுந் தாய் மொழியையே
விருப்புடன் படிக்கின்றனர் தம்மை
வீரத்தமிழரென்றே சொல்லுகின்றனர் (நெ)

80. வேம்புக்கினிய தேன்விட்டு வளர்க்கினும்
மேவுங்க சப்பதனை விட்டு நீங்குமோ
பாம்புக்குப் பாலைக்கொடுத்து வளர்ப்பினும்
பல்லின் விடம் நீங்குமோ பகர்ந்திடுவீர் (நெ)

81. என்னிடத் தேபிறந்தென் அந்தோ
எனதுபா லைக்குடித்தென் என்மொழிகற்றென்
தன்னுடைச் சாதி புத்தி மாறித்
தனைத்தமிழ் மகனென்று சொல்வனோ பார்ப்பான்(நெ)

82. ஆரியன் கூத்தாடினும் என்றும்
அவன் காரியத்தினிலே கண்ணாயிருப்பான்
வீரியமாகப் பேசலும் தேச
விடுதலைக் குழைத்தலும் வெறுங்கதையே (நெ)

83. ஆறுயிர மயிலுக் கப்பால் வாழும்
ஆங்கிலர் ஜர்மானியர் அமெரிக்கர்கள்
ஏராருந்தமிழ் மொழியைப் பயின்று
என்னைப் புகழ்ந்துபுகழ்ந் தேற்றிச் செல்கின்றார் (நெ)

84. ஐந்நூறு கற்களுக்கப்பால் — வாழும்
ஆரியர் தமிழினைப் பயின்றதுண்டா
கண்ணேறு பட்டுவிடுமா — அல்லது
கற்றால் அவர்கள் பாடை செத்து விடுமா — (செ)

85. வடபுலந்தன்னிலிருந்து — என்னாட்டில்
வந்து குடியேறிய மார்வாரிகள்
அடியோடென் தமிழ் மொழியைப் — படிக்காமல்
அடமாகவிருப்பதேனறிந்தீர்களோ — (செ)

எ.ஸ்க. சர் — தேதில்
86. தியாகராய~~நகர தனில்~~ — ~~உள்ள~~
இந்தி சபையிற் சென்று பேசும் பொழுது
காங்கிரசுக்குத் தலைவன் — தமிழைக்
கடபடா வென்றிருப்பதாகக் கூறினான் — (செ)

87. கல்லினைக்கடிப்பது போல் — வாயாற்
கடபடாவென்று கத்தித் திரிபவர்க்கு
மெல்லிய தமிழொலியுங் — கடபட
வென்னு மொலிபோலக் கேட்டல் வியப்பல்லவே (செ)

88. மல்லிகை மணம் வீசினால் — மீன்விற்கும்
வாணிபப் பெண்கள் முகஞ்சுளிப்பதுபோல்
மெல்லிய தமிழிசையை — அதிர்
வேட்டொலி கேட்டவர் வெறுப்பதியல்பே — (செ)

89. தமிழர்கள் மட்டுமெதற்கு — இந்தி
தன்னைப் படிக்க வேண்டும்? தலைவிதியோ?
உமிழுங்கள் காறியதனைத் — தமிழர்
ஒருவரும் படிக்காமலொரு முகமாய் — (செ)

90. அந்தியகாலத்திற்றான் — உண்ணும்
அன்னத்தில்வெறுப்பும்பார்ப் பன்ன வெறுப்பும்
வந்திடுமொருவற் கென்றே — எனது
மக்களை யேமாற்றியே வருகின்றனர்

91. பார்ப்பனத் துவேடத்திற்கா இருந்திருந்து
பாத்திர ராகவேண்டு மென்று பலபேர்
ஊர்ப்புறங் களிலுள்ளோரும் எதிர்த்தே
உண்மையைப் பேசுதற்கும் பின்னடைகின்றார் (நெ)

92. கன்மனப் பார்ப்பனர்கள் தருஞ்சாபத்தை
காற்றாசிக்கு நிகராய்க் கருதுபவன்
தன் மதிப்புடை யோனுவான் அவனே
தமிழ் மகனென்று சொல்லத் தகுதியாவான் (நெ)

93. கோவில் மடங்கள் சத்திரங் குளிக்குங்
குளங் கூவங் கடல் நதியிடங்களிலும்
சாவிலும் வாழ்வினிலும் நாற்பது
சடங்கு செயுமுரிமை தமக்கே யென்றார் (நெ)

94. தானங்கள் வாங்குதற்கும் மற்றைத்
தருமங்கள் பெறுதற்கும் சகலவித
ஞானங்கள் அடைவதற்கும் பார்ப்பனர்
நாங்களே யுரியவரென்று சொல்கின்றார் (நெ)

95. வாத்தியா ராவதற்கும் கோர்ட்டு
வக்கீல்களாவதற்கும் மடைத்தொழிற்கும்
பாத்திரர் நாங்களெனவே அனைத்தும்
பார்ப்பன மாக்கள்கைப் பற்றி விட்டனர் (நெ)

96. வல்லாண்மை பெற்ற மக்களே ஆடு
மாடுகள் போலுங்களை மதித்து விட்டார்
எல்லா உரிமைகளையும் பறித்தும்மை
ஏமாந்த சோணகிரி யாக்கிவிட்டனர் (நெ)

97. இனியேனும் விழிப்பீர்களா அல்லது
ஏழையராய்க் கைகட்டிப் பிழைப்பீர்களா
சனியான இந்திப்பாடையை உங்கள்
தலையிற் சுமத்துதற்குச் சம்மதிப்பீரா (நெ)

98. சம்மதிப்பீர்களானால் உங்கள்
தனித்தமிழ்மொழியினித் தலையெடுக்கா
அம்மவோ! யெனது மக்காள் உங்கள்
அருமைத்தாய் மொழியினை யிழந்திடாதீர் (நெ)

99. மாசற்ற நெஞ்சுடையோர் பேசும்
வன்சொல்லு மின்சொலாகும் வஞ்சமனத்தார்
பேசுற்ற இன்சொற்களும் பிரிதெனும்
பெரியோர் மொழிகளைநீர் பின்பற்றிடுவீர் (நெ)

100. உரிமையைப் பறிகொடுத்துப் பின்னர்
உயிர்வைத்து வாழ்வதுங்கள் மரபலவே
வறுமையடைந்த போதினும் தமிழ்
மக்கள் தலைவணங்கி வாழ்ந்ததில்லையே (நெ)

101. ஒழுக்கந் தவறியாயினும் இந்த
உயிரினைப் பேணிவாழ்வோர் நாமலவே
இழுக்கொரு சிறிதுறினும் போக்குவான்
இன்னுயிர் நீத்தல் நமக்கியற்கையன்றோ (நெ)

102. கதவினைத் தட்டிவிட்டதால் ஒருத்தியின்
கற்புக் கிழிவெனவே கருத்திலுன்னி
கதுமென வாளையுருவி தட்டிய
கரத்தைத் துணித்தெறிந்தோன் தமிழனன்றோ (நெ)

103. பெண்ணொருத்தி கணவனை ஒருவன்
பேச்சினாற் கொல்லச்சொன்ன பிழையை யெண்ணி
தன்னுயிரினைக்கொடுத்தே அன்று
தனதுசெங் கோல்நிமிர்த்தோன் தமிழனன்றோ (நெ)

104. நானுங்கள் தாயல்லவோ எனையிந்தி
நாரியடிமை கொளப்பார்த்திருப்பதோ
சானுடல் வளர்ப்பதற்கா நீங்கள்
தன்மதிப்பிழப்பது சரியல்லவே (நெ)

105. என் மகன் போர்க்களத்திற் பகைவற்
கிடைந்து புறமுதுகிட் டிறந்தாலவன்
உண்முலை யிரண்டினையும் அறுப்பனென்றே
யுத்தகளஞ் சென்றவள் உங்கள் தாயன்றோ

106. அன்னிய நாட்டின் பொருளை வாங்கின்
அவரவர் நாட்டின் பொருள் அழிவுறுமோ
என்னவிடை பகருவார் அந்தோ
இந்தியாற்றமிழழியா தென்னு மேழையர்

107. உண்மைத் தமிழர்களாயின் உங்கள்
உரிமையைக்காப்பதற்கு ஒற்றுமையாவீர்
பெண்மையை யடிமைசெய்யும் சுயநலப்
பேடிகள் சொல்லைக்கேட்டுப் பின்னடையாதீர் (நெ)

108. என்னருந் தமிழ்மக்களே அந்தோ
எனக்கு வருமிழிவிங் குமக்கல்லவோ
இன்னுயி ரைக்கொடுத்தேனும் நம் நாட்டில்
இந்திக் கிடங்கொடாமல் எற்றிடுவீரே (நெ)

109. கட்டாயமாக இந்தியை நீங்கள்
கற்றுத்தான் தீரவேண்டுமென்று கண்டிப்பாய்
சட்டங்கள் செய்தபோதினும் அதனைத்
தகர்த்தெறிந்தாலே நீங்கள் தமிழராவீர் (நெ)

110. தமிழினை வளர்த்திடுவீர் நீங்கள்
தன்மதிப்போடுலகில் வாழ்ந்திடுவீர்
அமிழ்தினு மினியயெனை இன்றே
அரியணை யேற்றியெனதாசி பெறுவீர்

111. என்மகன் அருணகிரி நாதன்
இதயத் திருந்து நானே யியம்பியதோர்
பொன்மொழி யாகுமிது இதனைப்
போற்றுந் தமிழரெல்லாம் புகழடைவீர். (நெ)

தமிழ்த் தாய் வாழ்க !

இப்புத்தகம் கிடைக்குமிடங்கள்

சாது நாராயண தேசிகர் புத்தகசாலை
121, திருவொற்றியூர் ஐரோட்,
சென்னை.

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.
6, பவழக்காரத் தெரு,
சென்னை.

செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
147, பவழக்காரத் தெரு,
சென்னை.